தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 ஜனவரி 2004 கனி 2

ஆசிரியர்
B. அர்ஜுனன்

கிறிஸ்துவின் செய்தி இதழின் பதின்மூன்றாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கு

வாசகர்களுக்கு,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு தஞ்சை மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

நோக்கம்: 1992 முதல் 2003 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு. இந்த பதின்மூன்றாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை எதிர்காலத்தில் நமது இதழின் இலக்கு.

நாள்: ஜனவரி 31-ம் தேதி சனிக்கிழமை, காலை 10-00 மணி

இடம்: கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,
86, காவேரி நகர் மேற்கு (கிறிஸ்து ராஜா காம்பளக்ஸ்)
புதிய பேரூந்து நிலையச் சாலை,
தஞ்சாவூர் - 613 005

மேலும் விபரங்களுக்கு
THE WORD OF CHRIST
✆ 04543 - 263278

கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்
சகோ. ஜான்சுவார்ட்ஸ்
✆ 04362 - 255644

ஒருவழி *(தபால்வழி பாடத்திட்டம்)*
MASTER COURSE

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்று நீங்கள் இரட்சிக்கப்பட அருமையான பாடத்திட்டம் இது. இப்பயிற்சியில் சேர்ந்து படிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

சேர்க்கை கட்டணம்	: ரூபாய் 30 (தபால் செலவுக்காக)
வயது	: 20க்கு மேல்
ஆண்டுகள்	: இரண்டுவருடம்
பாடத்திட்டம்	: ஆறு பகுதிகள்
மொழி	: தமிழ்

ஆறு பகுதிகளை முடிப்பவர்களுக்கு இறுதிச் சான்றிதழ் **MASTER COURSE CERTIFICATE** வழங்கப்படும். இன்றே ரூபாய் 30 செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள் . இப்பாடத்திட்டம் உங்கள் வீடுதேடி வரும்.

குறிப்பு:
உங்கள் முகவரியை ஆங்கிலத்தில் மாவட்டம், பின்கோடு உள்பட தெளிவாக எழுதி அனுப்பவும்.

BATLAGUNDU BIBLE COLLEGE
Post Box No: 5
Batlagundu - 624 202 South India

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 4 ஜனவரி - 2004 கனி - 2

ஆசிரியருரை

ஆரம்பம்
Beginning

இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இச்செய்தியின் மூலம் நான் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்ப நிகழ்ச்சிகளை நாம் யாரும் மறக்கமுடியாது. ஒவ்வொருவரும் ஆரம்பத்தில் பல தீர்மானங்களை எடுப்பார்கள். ஆரம்பத் தீர்மானம் அருமையாயிருந்தாலும் அதை முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டு நிலைத்திருப்பதுவே மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும், "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு" (பிர.3:2) என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். இக் காலங்களை நாம் சரியாக பயன்படுத்தி "விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி. 12:1). நம்மிலே விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. ஆகையால்அவர் மேல் நாம் நம்பிக்கை வைத்து நமது ஆரம்பத்தை துவக்குவோம். இவ்வருடத்தின் முதலாம் மணிவேளையை ஆண்டருக்கு கொடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

"இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது" (பேது. .2:6). ஆம், பிரியமானவர்களே அந்தக்கல் கிறிஸ்துவே! அவரில், நீங்கள் விசுவாசம் கொள்ளும்போது வெட்கப்பட்டுப்போவதில்லை. அவருக்குக் காத்திருக்கிறவர்கள் கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். நீங்கள் எடுத்த தீர்மானத்தில் உறுதியாயிருங்கள். உங்களுடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் முடிவிலே சம்பூரண ஆசீர்வாதம் பெறுவீர்கள். ஆகையால் நம்பிக்கையில் தளர்ந்து போகாதிருங்கள். நீங்கள் எடுத்த தீர்மானங்களை நான் அறியேன் ஆனால் கர்த்தர் நிச்சயம் அறிவார்.

உங்களுடைய விசுவாசத்தின் ஆரம்பம் படிக்கின்ற காலத்தில் ஏற்பட்டு இருக்கலாம்,தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஏற்பட்டு

இருக்கலாம், அல்லது திருமணத்தில் ஏற்பட்டு இருக்கலாம். நீங்கள் எங்கே உங்கள் விசுவாசத்தை துவக்கினாலும் அதை முடிவுபரியந்தம் காத்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி.3:14). விசுவாசத்தை நம்மில் துவக்கினவர் அது முடிவுபரியந்தமிருக்க எதிர்பார்க்கின்றார். அதிலே நாம் நிலைத்திருக்கும்போது அவரிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாயக் கனிகொடுக்கமாட்டாதது போல,நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள்"(யோவா.15:4) என்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் உள்ள எபேசு சபைக்கு கர்த்தர் எழுதும்போது "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு"(வெளி.2:4) என்கிறார். பொதுவாக ஆரம்ப விசுவாசம், அன்பு எல்லாமே மிக நன்றாகத்தானிருக்கும். போகப்போக நாளடைவில் எல்லாம் குறைய காணப்படும். இதற்கு என்ன காரணம்? என நாம் ஆராய்ந்து பார்க்கும்போது நம்பிக்கை இல்லாமையே என அறிந்து கொள்கிறோம். நம்பினவர் நட்டாற்றில் விட்டார் என சொல்வார்கள் அது உண்மையிலும் உன்மை. ஏன் மனிதனை நம்பவேண்டும்? "மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" (சங்.118:8) என வேதம் நமக்குப்போதிக்கிறது. அதுமட்டுமல்ல "கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல இருப்பார்கள்"(சங்.125:1). இதை நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

ஆரம்பத்திலேயே ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பெற வேண்டும் என்றிருக்கிறவர்கள் அநேகர். ஆனால் வேதம் சொல்லுகிறது "ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது" (நீதி.20:21). இதைக் குறித்து கர்த்தர் விளக்கமாக ஒரு உவமையின் மூலம் நமக்கு விளக்குகிறார். என்னவென்றால் "கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாத படியினாலே, கொஞ்சகாலமாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்" (லூக்.8:13). அந்தப்படியே ஆரம்பத்தில் துரிதமாய் ஆசீர்வாதம் பெற்றவர்களும் சோதனை காலத்தில் பின்வாங்கிப்போய், முடிவிலே ராஜ்யத்திற்கு தூரமாவார்கள். ஆகையால் பிரசங்கி எழுதும்போது "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது" (பிர.7:8) என்கிறார். இதைக்குறித்து பவுல் குறிப்பிடும்போது "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன். எனக் குறிப்பிடுகிறார். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டே

னென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து,முன்னான்வைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி.3:12-14) என்கிறார். ஆரம்பத்திலே ஆசீர்வாதத்தை பெற்றுவிட்டோம் என்று இல்லாதபடி முடிவான ஆசீர்வாதத்தை நோக்கி நாம் வெற்றி நடை போடவேண்டியது மிக அவசியம். பவுல் சொல்வதைப்போல பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுங்கள்.

துவக்கத்தை தடுக்க தூங்காமல் விழித்திருப்பவன் பிசாசு. ஆகையால் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்"(1பேது.5:8). பிசாசானவன் யூதாசுக்குள் புகுந்ததுபோல, சத்தியத்திற்கு செவிகொடாத மனுஷருக்குள்ளும் புகுந்து எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆரம்பத்திலே கலாத்திய சபையாரையும் விழுங்கப்பார்த்தான். இதை அறிந்த பவுல் அவர்களுக்கு பரிசுத்தஆவியானவரின் உதவியோடு எழுதும்போது "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்கு கீழ்படியாமற்போக உங்களுக்குத் தடை செய்தவன் யார்?"(கலா.5:7) மேலும் "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே... ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்போது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களா? அவைகள் வீணாய்போயிற்றே"(கலா.3:1-4) என்று எழுதுகிறார். **நீங்கள் இப்புத்தாண்டை ஆவியில் ஆரம்பம் பண்ணப்போகிறீர்களா? அல்லது மாம்சத்தில் ஆரம்பம் பண்ணப்போகிறீர்களா?** மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம், வேதமும் இதைக்குறித்து எச்சரிக்கிறது.

"தன் மாம்சத்திற்கென்று விதைவிதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைவிதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்" (கலா.6:8). நீங்கள் எதற்கென்று விதை விதைக்கப்போகிறீர்கள். ஐசுவரியவான் ஒருவன் : "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்.... தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்"(லூக்.12:19-21). தன் மாம்சத்திற்கென்று வாழ்கிறவனுடைய முடிவு மேற்கண்ட ஐசுவரியவானுடைய முடிவுபோல் தானிருக்கும். ஆவிக்கென்று விதைவிதைத்த ஸ்தேவானுடைய

குடும்பத்தைப் பற்றி 1கொரி.16 ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற் பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார் களென்றும் அறிந்திருக்கிறீர்க்களே..... அவர்கள் என் ஆவிக்கும் உங்கள் ஆவிக்கும் ஆறுதல் செய்தவர்கள். இப்படிப்பட்டவர்களை அங்கிகாரம் பண்ணுங்கள் என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார். இப்படிப்பட்ட முதல்நூற்றாண்டு பரிசுத்தவான்களைப்போல ஆவிக்கென்று விதை விதையுங்கள். அப்பொழுது நித்திய ஜீவனை அறுவடை செய்வீர்கள்.

ஆவிக்கென்று விதை விதைத்த வைத்தியனாகிய லூக்கா மகா கனம் பொருந்திய தேயோப்பிலுவுக்கு எழுதும்போது,"ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக்குறித்து சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று"(லூக்.1:2-4) என்று எழுதுகிறார். பரிசுத்த வேதாகமம் ஒன்றே ஆரம்பமுதல் பேசுகிறது. மற்றவைகள் முதலுமில்லாமல் முடிவுமில்லாமல் தோற்றமளிக்கின்றன. உங்களுடைய நம்பிக்கையை முதலாவது பரிசுத்த வேதாகமத்தில் துவக்குங்கள். ஏனென்றால் ஆதிமுதலாய் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த லூக்கா எழுதுவதுபோல வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்ட ஒன்று. இதை தொடர்ந்து படிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தை ஒருமுறை முழுமையாக நீங்கள் படிக்கவில்லை என்றால் இம்மாதமே உங்கள் வாசிப்பை துவங்குங்கள். இவ்வருடத்தில் வேதம் வாசிக்கும் பழக்கம் உங்களுக்கு ஆரம்பமாகட்டும்.

உலகத்தோற்றத்திற்கு ஆரம்பம் உண்டு "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"(ஆதி.1:1). அதைப்போல மனிதனுடைய தோற்றத்திற்கும் ஆரம்பமுண்டு. உலகத்தில்ஆரம்பமில்லாமல் ஒன்றுமில்லை. **இப்புத்தாண்டில் புதிய தீர்மானத்தோடு ஆரம்பிக்கப்போகிற உங்களை நான் வேண்டிகொள்வதென்னவென்றால் நீங்கள் எதைச்செய்தாலும் அதை கர்த்தருடைய நாம மகிமைக்கென்றே செய்யுங்கள்.** அற்பமான ஆரம்பமாக இருந்தாலும் அது அநேக ஆசீர்வாதங்களைத் தரட்டும். நாம் யாவரும் பிறக்கும்போதே அனைத்து ஆசீர்வாதங்களோடும் பிறப்பது இல்லை. மாறாக படிப்படியாக ஒவ்வொன்றையும் பெற்றுக்கொள்கிறோம். ஆரம்பமுதல் ஆசீர்வாதங்களை படிப்படியாக விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டவர்களை எபிரெய ஆசிரியர் எபிரெயர் 11 ம் அதிகாரத்தில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சுழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு...பொறுமையோடே ஓடக்கடவோம்"(எபி.12:1). நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்கிறோம். கர்த்தர் இவ்வருடத்திலே மிகவும் சிறப்பான ஆரம்பத்தை உங்களிலே துவக்குவாராக.

எல்லோரும் யூதாஸ்களல்ல

Not all are Judases

-J.C.Choate

அவ்வப்பொழுது தங்கள் பகுதி சபையிலுள்ள அனைத்து பிரச்சனைகளையும் என்னிடம் கூறுகின்ற சில தனிப்பட்ட நபரிடமிருந்து நான் ஒரு கடிதத்தைப் பெறுகின்றேன். அவர் வெளிநாட்டு உதவியையும் பணத்தையுமே சார்ந்திருக்கின்ற பிரசங்கிகளைப் பற்றி குறிப்பிடுகின்றார். அவர்கள் ஞானஸ்நானத்திற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து பிரகாசமான அறிக்கையை அனுப்புகின்றார் என அவர் கூறுகிறார். இதைப்போல் வேறு சில பிரச்சனைகளையும் தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட தனி நபர் அந்தக்காரியங்கள் மிக மோசமானவைகள் என்றும் தான் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக இருந்ததற்கு வெட்கப்பட்டதாகவும் எழுதினார். அவர் தன்னுடைய பகுதியில் சபை கெட்டபெயரைக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார்.

இது துயரமான சம்பவமில்லையா? இதைப்பற்றிய ஒவ்வொரு வார்த்தையும் மிக உண்மையாக இருக்கலாம். இப்படிப்பட்ட ஒரு அறிக்கையின் பொருள் என்ன? இது கர்த்தடைய சபையின் அங்கத்தினர் என உரிமைப்பாராட்டுகின்ற சில மோசமான மக்கள் உண்டென்பதையே காட்டுகிறது. இது சபையை குற்றப்படுத்துகிறதா? இல்லை,வேஷந்தரித்த அவர்கள் குற்றவாளிகள், அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதே இதன் பொருளாகும்.

நான் இந்தப் பிரச்சனைகளைப் பற்றி எழுதின இந்த குறிப்பிட்ட தனிநபருக்கு சொல்லவிரும்புவது என்னவென்றால் இயேசுவும் தன்னுடைய அப்போஸ்தலர்கள் மத்தியில் யூதாசை பெற்றிருந்தார்! என்பதேயாகும். அது கிறிஸ்துவை குற்றவாளியாக்கவில்லை, அல்லது அவர் ஒரு வேஷந்தரித்தவர் எனப் பொருள்படுத்தவில்லை, மேலும் மற்ற அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தவில்லை. மாறாக, இது கபடமாக நடித்த யூதாசை மட்டுமே குற்றப்படுத்துகிறது. **ஒருவருடைய** தவறான-செயலுக்காக **எல்லோரையும்** குற்றப்படுத்தக் கூடாது மாறாக நாம் வேஷந்தரித்தவர்களைப் புறக்கணித்து, நல்லவர்களாகயிருப்பவர்கள் மேல் முக்கியத்துவம் காட்டவேண்டும்.

அனைத்து சமயக்குழுக்களிலும் மோசமான ஜனங்கள், வேஷந்தரித்தவர்கள், திருடர்கள், பொய்யர், விபச்சாரக்காரர், மேலும் எல்லாவித அசுத்தங்களையும் நடப்பிக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சமய அமைப்புகள் தீர்க்கப்பட்டிராது மேலும் தண்டிக்கவும்பட்டிராது, ஏனென்றால் அந்த அமைப்பின் சில அங்கத்தினர்கள் தவறான செயல்களை செய்து கொண்டிருக்கலாம். மாறாக, இது தேவ வார்த்தையின் போதனை அடிப்படையிலோ அல்லது அந்த புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள நேர்மையின் நிலையோடு அங்கத்தினர்களின் வாழ்வின் மேன்மைக்காக உருவாக்கப்பட்டுள்ள உண்மையான பிரயாசத்தின் அடிப்படையிலோ தீர்க்கப்பட வேண்டும்.

அங்கே பவுலின் காலத்தில் சத்தியத்தை விட்டு விலகி உலகத்திற்குத் திரும்பினவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவன் தேமா, இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, பிரிந்து போய்விட்டான் எனக் கூறினான் (2தீமோ.4:10). மேலும் பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள சபைக்கு, பிரிவினை போன்ற எண்ணற்ற மோசமான பிரச்சனைகளான சகோதரனுக்கு விரோதமான நடக்கையில் ஈடுபடுதல், விபச்சாரத்தைக் குறித்த குற்ற உணர்வுடனிருத்தல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை புசித்தல், கர்த்தருடைய பந்தியை சாதாரணமான போஜனத்திற்கு ஒப்பாக எண்ணுதல், இன்னும் இதுபோன்ற பல பிரச்சனைகளைப் பட்டியலிட்டு எழுதினான். ஆயினும், அவன் அங்குள்ள சகோதரரை தேவனுடைய சபையாக அழைத்தான் (1கொ. 1:1,2). அவர்களுக்கு அவன் எழுதிய இரண்டாவது நிருபத்தில், ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட அவர்களுடைய பிரயாசத்தில் சில முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததை நம்மால் காணமுடிகிறது.

கிறிஸ்து யூதாஸின் துரோகத்தினிமித்தம் அப்போஸ்தலர்களை கைவிட்டு விடவில்லை,மேலும் யூதாஸ் செய்த காரியத்திற்காக அப்போஸ்தலரும் கலைந்துசென்று விடவில்லை. உண்மையான நிகழ்ச்சியாக, அவர்கள் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள் முதற்கொண்டு, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் நாள் வரைக்கும், அவர்களுடனே கூட இருந்த மனுஷர்களில் ஒருவனை யூதாஸ் இழந்து போன இடத்தில் பங்குபெறுவதற்காக தெரிந்தெடுக்கும்படிக்கு தொடர்ந்து முயன்றார்கள் (அப்.1:21-26).

சகோதரரில் சிலர் தன்னை விட்டு விட்டபடியினாலோ அல்லது கொரிந்து பட்டணத்திலுள்ள சபையில் காணப்பட்ட எல்லா பாவங்களினிமித்தமாகவோ பவுல் சபையை விட்டு விலகவில்லை. அவன் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் தவறான வழியில் சென்ற தன்னுடைய சகோதரரை சீர்திருத்தம் செய்யும் முயற்சியிலும் விசுவாசமுள்ளவனாய் நிலைத்திருந்தான் . அவன், கிறிஸ்து எவ்வாறு சபைக்காக மரித்து, அதைத் தம்முடைய இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொண்டு, சபையின் இரட்சகராகவும், அதன் தலைவராகவும், மேலும் அவர் தமக்கென்று சபையை ஏற்றுக்கொள்ளும்படிக்கு திரும்பவும் வருவார் என்ற சபையைக்குறித்த அற்புதமான காரியங்களை சொல்லவும் உறுதிகொண்டிருந்தான் (எபே.5:25; அப்.20:28; எபே.5:23; கொலோ.1:18 1கொ.15:24). குறைபாடுள்ள கர்த்தருடைய சபைக்குக் கற்றுக்கொடுத்தான் என்ற இந்தக் கூற்றுகளிலிருந்து, தேவனுடைய கிருபையானது, அவர்களுடைய வாழ்வில் கிறிஸ்தவர்களாக வளருவதற்கு மனிதாபிமான வாய்ப்புகளை அனுமதிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது.

நாம் கர்த்தருடைய வழி, அவருடைய சபை, அவருடைய ஜனங்கள் மற்றும் சபையின் நாமத்தினை விட்டு விலகக்கூடாது. நாம், அவர்களுடைய பக்தியற்ற வாழ்வில் சில அங்கத்தினர்களின் துரோகத்தினிமித்தம் சபைதனைக் குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருக்கக் கூடாது. நாம் அந்த நபர்களைக் குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருந்து அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி, அவர்கள் மனந்திரும்பி மீண்டும் கர்த்தரிடமாய்ச் சேருவதற்கு ஊக்குவித்து நலமானதைச் செய்யவேண்டும். ஆனால் நாம் கர்த்தரிடத்தில் தாமே விசுவாசமுள்ளவர்களாகவும் அவர் நமக்குச் செய்த வற்றிற்காக நம்மால்

முடிந்தவற்றை மென்மேலும் செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். ஜீவனோடிருக்கப் போதுமானவற்றை சபைக்கும், அதன் விசுவாசமுள்ள அங்கத்தினராயிருக்க நமக்கும், கர்த்தர் செய்தவற்றிற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

சபை அங்கத்தினர்கள் செய்த சிலவற்றிக்காக சபையை விட்டு விலகுவது காரியத்திற்கு உதவாது. நாம் நம்முடைய சொந்த சபையை துவங்கவோ, அல்லது கிறிஸ்துவின் நாமம் தரித்த கபடர்களினிமித்தம் 'கிறிஸ்துவின் சபை' என்ற பதத்துடன் ஒட்டிக்கொண்டிருந்த வெளிப்படையான கறையிலிருந்து விடுவித்துக்கொள்ளும்படிக்கு கர்த்தருடைய சபைக்கு வேறொரு நாமத்தை தெரிந்து கொள்ளவோ கூடாது. நாம் குறிப்பிட்ட சில மாம்ச சுபாவத்துடனிருப்பதால், ஒவ்வொரு குழுவிலும் கபடுசெய்கிறவர்களும் பாவிகளும் இருப்பார்களென நாம் உணர்ந்து கெள்ளவேண்டும். நீங்கள் "துரோகி" யிடமிருந்து விடுவித்துக்கொள்ள கர்த்தருடைய சபையை நிராகரித்தால், நீங்கள் "உங்களுடைய" சபையில் அல்லது வேறுயாரோ ஒருவருடைய சபையில் இதே பிரச்சனைகளையே சந்திப்பீர்கள். --நீங்கள் தானே கர்த்தருடைய சபையின் ஒரு அங்கத்தினராக ஒருபோதும் கருதப்படமாட்டீர்கள் என்ற வித்தியாசமட்டுமே இருக்கும். ஆகவே நீங்கள் பிரச்சனையின் தீர்வாகயிருப்பதற்குப்பதிலாக பிரச்சனையின் ஒரு பகுதியாக மாறியிருப்பீர்கள்.

நாம் இந்த பூமியின் மேல் சபையில் வேஷந்தரித்தவர்களோடு வாழ வேண்டியவர்களாயிருப்போம் அல்லது அழிவில் வாதையில் வாழ வேண்டியவர்களாயிருப்போம் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளவேண்டும். கர்த்தர், அவருக்குக் கீழ்ப்படிந்து மரணபரியந்தம், மற்றவர்கள் செய்கின்றதை கருத்தில் கொள்ளாமல் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் நமக்கும் உதவிசெய்வாராக! **எல்லாரும் துரோகிகள் அல்ல** என்பதை சற்றே நினைவுகூருங்கள்.

தெரிந்து கொள்ளுங்கள்

பூமி உருண்டையாக இருக்கிறது (ஏசா.40 :22 ; நீதி.8 : 27)

பூமி அந்தரத்தில் தொங்கவைக்கப்பட்டுள்ளது (யோபு 26 :7)

வான வெளியானது அளவிட முடியாதது, நட்சத்திரங்கள் எண்ண முடியாது (ஆதி.15 : 5 ; எரே.33 : 22)

பொது அறிவு சோதனை

தென் மத்திய ரெயில்வேயின் தலைமையகம் எது?

விரைவு தபால் சேவை எப்போது தொடங்கப்பட்டது?

தென் துருவத்தை அடைந்த முதல் மனிதர் யார்?

சீனாவின் புனித விலங்கு எது?

ஆசியாவின் இத்தாலி என்று அழைக்கப்படும் நாடு எது?

விடைகள்

1. செகந்திராபாத்
2. 1986
3. அமண்ட் சென்
4. பன்றி
5. இந்தியா

நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன் என்பது குறித்து கவலையில்லை

It's Doesn't Matter Which Religion I Follow

-Betty Burton Choate

பெண்கள் பகுதி

உலகில் பல சமயங்களும், பல புனித நூல்களும் பல மத குருக்களும் உண்டு. இந்த பல்வேறு சமயங்களின் ஸ்தாபகர்கள் 'புனிதர்கள்' என தங்கள் சீடர்களால் கருதப்படுகின்றனர். அநேக ஜனங்கள் வழக்கம்போல தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருந்தாலும், உண்மையில் எல்லா சமயங்கள் ஒன்று என்றும் முடிவில் விளைவானது எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமென்றும் நினைக்கின்றனர். அவர்கள் "எல்லா சமயங்கள் நல்லவனாயிரு, நல்லதைச் செய்" எனப் போதிக்கிறது. இதுவே போதுமானது நீங்கள் முகமதுவையோ அல்லது கிருஷ்ணனையோ அல்லது இயேசுவையோ பின்பற்றினால் பரவாயில்லை- எல்லாமே ஒன்றுதான் ! என விவேகத்துடன் விளக்குகின்றனர்.

ஆனால் **இது ஒன்றானதா?** பல்வேறு சமய சீடர்களை பின்வரும் இவைகளின் மூலம் வேறுபடுத்த உங்களால் முடியுமா?

- அவர்களின் ஆடை அணியும் விதத்தை உற்றுநோக்கல்?
- அவர்களுடைய சொற்பொழிவுக்குக் கவனம் செலுத்துதல்?
- அவர்கள் மற்றவர்களை நடத்தும் விதத்தை உற்று நோக்கல்?
- அவர்களுடைய நடத்தை மற்றும் கௌரவத்தை பகுத்துப் பார்த்தல்?
- அவர்களுடைய வாழ்வில் எது முக்கியமானது என்பதை பார்த்தல்?
- அவர்கள் குடும்ப அங்கத்தினரோடு எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்தல்?
- அவர்கள் எங்கு, மற்றும் எவ்வாறு ஆராதிக்கிறார்கள் என்பதை உற்றுப் பார்த்தல்?
- அவர்கள் தேவனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிந்து கொள்ளுதல்?
- அவர்களுடைய வாழ்க்கை தத்துவம், மரணம், மற்றும் பிற்கால வாழ்வு போன்றவற்றை கேள்விபடுதல்?
- அவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் பாவத்தை சமாளிக்கிறார்கள் என கற்றறிதல்?
- அவர்களுடைய குரு மற்றும் புனிதநூலின் போதனையை படித்தல்?

நிச்சயமாக, ஒவ்வொரு சமயத்தினை ஒப்பிட்டுப்பார்ப்பதில் நாம் இப்பட்டியலை தொடரலாம், மேலும் நாம் தொட்க்கத்திலிருந்து முடிவுவரை போதனைகளும் பழக்கவழக்கங்களும் அனுதின வாழ்வில் ஒரு முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதோடுகூட நித்திய எதிர்பார்ப்புகளிலும் ஏற்படுத்துகிறதை காணலாம்.

நாம் ஏதோ சில சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நமது முற்பிதாக்களின் சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கூட்டத்தாருடைய சமயத்தைப்பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. தனித்தனியே, ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவில்லாத ஆத்துமாவாகும்,மேலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நாம் தெரிந்தெடுக்கும் சமயத்திற்காக நித்தியத்தில் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்போம். நாம் உணர்ச்சியற்றவர்களாய், அக்கறையுடனிருக்க விரும்பாதவர்களாய் இருந்தால், **நாம் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறோம் என்பது பற்றி கவலையில்லை** என்ற தீர்மானத்திற்கு வரலாம்.

நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால் ஒப்பிட்டுப்பார்க்க, போதனைகளைக் கற்க, ஜனங்களின் வாழ்வின் முடிவில் ஏற்படும் விளைவைக் காணவும்கூட அதிக விருப்பமுடையவர்களாயிருப்போம், ஏனென்றால் இவையெல்லாவற்றின் முடிவிலும் நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவத்துக்கும் மற்றெல்லா சமயங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளில் முதன்மையானதும் அதிக பிரதானமானதுமான ஒரு வேறுபாடு என்ன? அது இதன் ஸ்தாபகர், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு அவருடைய மரித்தசரீரம் அடக்கம்பண்ணப்பட்டதேயாகும். இது வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, பல சாட்சியங்களின் விஷயம் தெரிந்தவர்களால் இதை மறுக்க முயற்சித்தும் கூட முடியாமல் போயிற்று அவருடைய சங்கதி அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தவற்றை தொடர்ந்து போதித்த சீஷர்களோடு கூட அங்கு முடிந்திருக்குமானால், விந்தையான கொள்கைகளை விவரித்து, சீஷர்களின் குழுக்களை ஏற்படுத்தி தங்களுடைய சமயத்தை தங்களுடைய மரணத்திற்குப் பின் உலகத்திற்கு மரணசாசணமாக ஏற்படுத்துகிற மற்றவர்களோடு இவர் சமமாக கருதப்பட்டிருப்பார்

ஆனால் இச்சம்பவம் அவருடைய மரணத்தோடும், அடக்கத்தோடும் ஒரேயடியாக முடிந்து விடவில்லை. அவருடைய விரோதிகள் அவரை சிலுவையில் அறைந்த அதே நகரத்தில் அவருடைய சீஷர்கள் அவருடைய சரீரத்தை களவாடிக் கொண்டுபோக ஏதுவில்லாதபடி அவருடைய கல்லறையைச் சுற்றி காவல் வைத்தார்கள், அவருடைய சரீரம் கல்லறை யிலிருந்து காணப்படாமற்போயிற்று! வேதாகமத்தில் கூறப்பட்டது போல அவர் உண்மையாகவே உயிர்தெழுந்து பரலேகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் உண்டு.

(1) அவருடைய விரோதிகள் அவருடைய மரித்த சரீரத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டிருந்தாலும் கூட காவலாளிகள் கல்லறை வெறுமையாக இருக்க கண்ட பிறகு, அவர்கள் ஒருபோதும் அந்த சரீரத்தைக் கொண்டு வரவில்லை: அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால்

அவர் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கிறவர்களின் வாய்களை மிக எளிதாக அடைத்திருந்திருக்கக் கூடும்! ஆனால் அவர்கள் **அதைச்செய்யவில்லை** - ஏனென்றால் அவர்களால் அது **முடியவில்லை!**

(2) இயேசுவின் மரணத்தின் போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய சொந்த ஜீவனை காக்க, பயத்தினால் அவரை மறுதலித்துவிட்டார்கள். அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு; அவர் அவர்களுக்கு இருமுறை காட்சியளித்து உலகமெங்கும் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதை அவர்கள் செய்து, மிகுந்த உபத்திரவத்தினால் மரணத்திற் குள்ளானார்கள். தங்கள் திடநம்பிக்கையில் இந்த தத்ரூபமான மாற்றம், இயேசு உண்மையாகவே தங்களுடைய உயிர்தெழுந்த இரட்சகர் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டது உண்மை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாயிருக்கிறது.

வேறு எந்த ஒரு சமய ஸ்தாபகரும் மரணத்தை ஜெயிக்கவில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கும் மற்றவற்றிற்குமுள்ள அடிப்படையான வித்தியாசம். "...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள்சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:11)என நாம் வாக்களிக்கப்பட்டுள்ளோம்.

திரும்பச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வுசெய்யுங்கள். கிறிஸ்துவுக்குள்ளாக வாக்களிக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் தெரிந்து கொள்ளுங்கள்.



கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்.(நீதி.22 : 9)

ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்.(பிர.6 : 9)

காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை.(பிர.1 : 8)

கண்சாடை காட்டுகிறவன் நோவு உண்டாக்குகிறான்.(நீதி.10 : 10)

தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும். (நீதி.28 : 27)

மேட்டிமையானவர்களின் கண்கள் தாழ்ந்துபோம். ஏசா. 5:15

கண்களின் ஒளி இருதயத்தைப் பூரிப்பாக்கும்.(நீதி.15 : 30)

உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது. (நீதி. 4 : 25)

நீ பார்வையடையும் படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.(வெளி.3 :18)

உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.(மத்.6 : 23)

உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு;(மத்.18 : 9)

இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? (நீதி. 23 : 5)

பாக்கியம் - Blessing

-J. Glory Arjunan

பெண்ணாகப் பிறப்பதே ஒரு பாக்கியம்! ஆச்சரிய மாயிருக்கிறதா? பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டாலே இடி விழுந்தாற் போல் எண்ணி துக்கப்படுகிறவர்கள் அநேகர். இப்படியிருக்க இது எவ்வாறு சாத்தியமாகும் என்கிறீர்களா? சகோதரிகளே, இது உண்மையிலும் உண்மை, நமது வேதாகமத்தில் ஏழு மரியாள்களைக் காணமுடிகிறது. அந்த ஏழு மரியாள்களின் வரிசையில் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமாய் விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களாலும், மற்றவர்களாலும் பெறமுடியாத பாக்கியத்தைப் பெற்ற அந்த பாக்கியவதி மகதலேனா மரியாள். ஆம் உயிர்த்தெழுந்த கர்த்தரை தரிசிக்கும் பாக்கிய பெற்றவள். தாம் பெற்ற பாக்கியம் பெருக இவ்வையகம் என இயேசு உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதலாக சீடர்களுக்கு அறிவித்தவளும் அவளே. இத்தனை பாக்கியத்தைப் பெற்றவள் ஒரு ஸ்திரீ என்றால் நாமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பாருங்கள், மகதலேனா மரியாள் இயேசுவின் பின்னாலே சென்று ஊழியம் செய்த இயேசுவின் சீஷியாவாள். இயேசு தம்மிடத்திலிருந்து ஏழு பிசாசுளையும் துரத்திவிட்டதினிமித்தம் இயேசுவின் மேல் அளவில்லா அன்பு கொண்டிருந்தாள். அன்பு அவளை நெருக்கி ஏவ தன்னுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தாள் (லூக் 82-3). அன்பான சகோதரிகளே, நமதாண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை சகல பாவங்களின் பிடியிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னிருந்த நம்முடைய ஜீவியத்தைத் திரும்பி நோக்குவோமானால் பிசாசின் காரியங்கள் ஏராளமாயிருப்பதைக் காணமுடியும். அருவருப்பான பாவச்சேற்றிலிருந்த நம்மை இன்று விடுதலையாக்கி கறைதிரையில்லாமல் பரிசுத்தமாக்கியிருக்கிற நமமுடைய கர்த்தரிடத்தில் மகதலேனா மரியாளைப் போல் அளவில்லா அன்பு கொள்ளுவோமானால் நிச்சியமாய் நாமும் பாக்கியவதிகளாயிருப்போம். மட்டுமல்ல, நம் அன்பிற்கு அடையாளமாக நம்முடைய உடைமைகளால் அவருக்கு ஊழியஞ் செய்வோம். அநேக வீடுகளில் ஸ்திரீகளே வீட்டின் பொக்கிஷதாரிகளாக இருப்பார்கள். தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையே ஓயாது நினைத்து பாலிசிக்கு மேல் பாலிசியை (Policy) அடுக்கிக் கொண்டிருப்பார்கள். அன்பின் சகோதரிகளே, பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என வேதம் கூறுவதை நினைவு கூறுங்கள். ஆஸ்திகளை விற்று இயேசுவுக்கு ஊழியஞ்செய்த இவளையும் மாதிரியாகக் கொள்ளுங்கள்.

இந்த மகதலேனா மரியாள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவளாக இருந்திருக்கிறாள். எனவேதான் இயேசு சென்றவிடமெல்லாம் சென்று ஊழியஞ்செய்ததோடல்லாமல் முடிவு பரியந்தம் இயேசுவை விட்டுவிலகாதிருந்தாள். இயேசுவை சிலுவையிலறைந்த பிறகும் இயேசுவின் சிலுவையினருகே மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள். (யோவா 19:25) சரி இயேசுதான் சிலுவையிலறையப்பட்டுவிட்டார்,

இனி நம்வழியே செல்வோம் என்று சென்று விட்டாளா? இல்லை. இயேசுவின் சரீரத்தை எடுத்து கல்லறையில் வைத்த போதும் அங்கேயும் மகதலேனா மரியாள் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தாள் (மத் 27:61). ஜனங்கள் இயேசுவை பிடித்தவுடனே "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்" (மத் 26:56) காரணம் தங்களுக்கும் இந்த கதி வந்துவிடுமோ என்ற பயம். ஆனால் மகதலேனா மரியாளோ "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற வசனத்திற்கேற்ப எந்த பயமுமில்லாதவளாய் இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படும் மட்டும் அங்கேயே இருந்தாள். அதுமட்டுமல்ல, பிற்பாடு ஓய்வு நாள் முடிந்து " வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்" (யோவா 20:1) இதையறிந்த சீஷர்கள் வந்து காலியாகயிருந்த கல்லறையைக் கண்டு மீண்டும் தங்களிடத்திற்கே திரும்பிப் போய்விட்டார்கள்.

ஆனால் மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; இயேசுவினிடத்தில் அவள் கொண்டிருந்த அன்பு தான் எத்தனை! அன்பு சகோதரிகளே, இக்காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்களேன்! நம்முடைய கலாச்சாரத்தின் படி கல்லறை பக்கம் செல்லவே பயப்படுகிற ஸ்திரீகளுக்கு இது ஒரு சவால் அல்லவா! மேலும் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இரண்டு தூதர்களை தரிசிக்கிறாள். அத்தோடும் நின்று விடவில்லை பின்பு உயிர்தெழுந்த கர்த்தரையே தரிசிக்கிறாள். எத்தனை பாக்கியம் இது! சற்று சிந்தியுங்கள்! அப்போஸ்தலாகளும் அநேக சீஷர்களும் அநேக ஸ்திரீகளும் இயேசுவின் பின்னே திரிந்து ஊழியஞ் செய்தார்கள். அனைவருமே இயேசுவின் மரணத்திற்குப் பின் தங்களுடைய வழியே சென்று விட்டார்கள். ஆனால் இவளோ, இயேசுவை விட்டு விலகவில்லை. இயேசுவை முதன் முதல் தரிசித்தவளும், இயேசுவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதல் அப்போஸ்தலருக்கு சொன்னவளும் ஸ்திரீயாகிய மகத லேனா மரியாள் தான். எத்தனை பாக்கியவதி இவள்! அப்படியென்றால் ஸ்திரீகளாகிய நாமும் இந்த பாக்கியத்திற்கு பங்குள்ளவர்கள் என்று தானே பொருள்.

அன்பு சகோதரிகளே! மகதேலானா மரியாள் நமக்கெல்லாம் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறாள். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக, விடுதலைக்காக, ஆசீர்வாதத்திற்காக, இன்னும் எத்தனையோ சிலாக்கியங்களுக்காக அவருக்கு நாம் என்னத்தை செலுத்துவோம்! "உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்" என்ற தொனி நம் காதில் எப்போதும் விழுந்து கொண்டேயிருக்கட்டும். மகதலேனா மரியாளைப் போல் இயேசுவை விட்டு விலகாதிருப்போமானால் பெண்ணாக பிறந்திருக்கிற நாமும் பாக்கியவதிகளாக, அநேகருக்கு பாக்கியங்களைக் கொண்டு செல்லுகிறவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை நற்கந்தமாக மாற்றுவாராக!

எபிரெயர் ஒரு கண்ணோட்டம்

-P.R.Swamy

இன்று புதிய ஏற்பாட்டிலுள்ள நிருபங்களில் ஒன்றான எபிரெயருக்கு எழுதின நிருபத்தை தியானிப்போம். இந்த நிருபத்தை எழுதியவர் பெயர் குறிப்பிடவில்லை. ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் எழுதி இருக்கலாம் என்று பலமாக நம்பப்படுகிறது. இந்த நிருபம் அப்போஸ்தலர்கள் யுகத்தில் யூதகிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகும். இந்த நிருபம் ஒரு உற்சாகமூட்டும் கடிதம் போலுள்ளது. முக்கியமாக எபிரெய கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுவிடாமலிருக்கும் படியும், விசுவாசத்தை விட்டு விலகுவதினால் வரும் ஆபத்தை குறித்தும் சொல்லி அவர்களை எச்சரித்தும் எழுதப்பட்டிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தை நீக்கிப்போட்டு, அதற்கு பதிலாக கிறிஸ்துவின் சுவிசேஷம் கொடுக்கப்பட்டிருப்பதையும் இந்த நிருபத்தின் ஆசிரியர் மையமாக வைத்து, எழுதியிருக்கிறார். மறுபடியும் யூத மார்க்கத்திற்கு இந்த கிறிஸ்தவர்கள் திரும்பி வழிவிலகி செல்லும் அபாயத்தை சுட்டிக் காட்டுவதே இந்த நிருபத்தின் நோக்கமாக அமைகிறது. இதன் ஆசிரியர் மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கும், மோசேயினிடத்திலிருந்து கிறிஸ்துவுக்கும் இங்குமங்குமாகச் சென்று ஒருகாலத்தில் தீர்க்கதரிசிகள் மூலம் பேசின தேவன் இந்தக் கடைசி நாட்களில் தன் குமாரன் மூலமாக திருவுளம் பற்றினார் என்றார்.

நிழலாயிருந்த காரியங்களையும், வரப்பேகிற காரியங்களையும் ஒப்பிட்டு, மோசேயைக் காட்டிலும் கிறிஸ்து விசேஷித்தவர் என்பதையும் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க,இயேசுவின் ரத்தம் மட்டுமே போதும் என்பதையும் தெளிவாக காட்டுகின்றார். வேதவாக்கியங்கள் ஆதாரத்தைக் கொண்டு, புதிய உடன் படிக்கையான கிறிஸ்துவின் சுவிசேஷம், வரையறை இல்லாதது, விசேஷித்தது என்றார். ஆபிரகாமுக்கு கூறியபடியே, தேவன் தம் வாக்குதத்தத்தை கிறிஸ்தவர்களுக்கும் நிறைவேற்ற வல்லவர். ஆகவே இப்பொழுது பாவத்திலிருந்து நம்மை கிறிஸ்து ஒருவரே மீட்க வல்லவர் என்று விவாதிக்கிறார். விசுவாச வீரர்கள் பட்டியலைக் கொடுத்து, இரண்டு முக்கிய காரியங்களை உணரச் செய்கிறார். அதாவது தேவன் வாக்குதத்தத்தை நிறைவேற்றுவார் என்று அவர் மீது அவர்கள் தங்கள் பூரண நம்பிக்கை வைத்திருந்தனர். கடந்த காலங்களில் தேவன் தம் மக்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றினார் என்பதை பழைய ஏற்பாடு வேத வாக்கியங்கள் காட்டுகின்றன. ஆகவே இன்றும் அப்படியே செய்வார் என்பதே அவர்கள் நம்பிக்கை.

எபிரெயர் 11-ம் அதிகாரம் விசுவாச வீரர்களின் பட்டியலை கொண்டது. அவர்கள் இணையற்ற விசுவாசத்தை தேவன் பால் வைத்திருந்தனர். உதாரணமாக, கல்தேய நாட்டிலுள்ள ஊர் என்னும் பட்டிணத்திலிருந்து தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, தேவனுடைய வாக்குதத்தங்களை நம்புவதைத்தவிர அவனுக்கு வேறொன்றையும் காணமுடியவில்லை. தேவன் நோவாவைப்பார்த்து, உலகம் முழுவதும் ஒரு பெரிய ஜலப்பிரளயம் வரும் என்று கூறிய போது, எந்த அறிகுறியையும்

காணாமலும், அவன் அதை விசுவாசித்தான். வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் தான், தேவனை விசுவாசித்து அவர் கூறியபடி அவ்விரு வீரர்களும் நடந்தனர். "விசுவாசம்" என்றால் என்ன என்று தெளிவாக, இந்த ஆசிரியர் வர்ணிக்காவிட்டாலும், அவர் கூறிய கூற்று விளங்கிகொள்ளக் கூடியதே. "விசுவாசம் நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. தேவன் தாம் சொன்னபடி செய்து, தன் வாக்கை காப்பாற்றுவார் என்று அவர்கள் மிகுந்த நம்பிக்கையுடனிருந்தனர்.

எல்லாம் தேவனுடைய நித்திய கரங்களிலிருக்கிறது என்பதை அவர்கள் விசுவாசித்தனர். தேவனுடைய சமூகத்திலே தாங்கள் என்றும் ஜீவிப்பதை அவர்கள் உறுதியாய் நம்பி இருந்தனர். ஜலப்பிரளயத்தைப்பற்றிய எச்சரிக்கையை முற்றிலும் நம்பினதால், நோவா அந்த பேழை ஏற்கனவே வெள்ளத்தின் மீது மிதப்பதாக உணர்ந்தான். வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை ஏற்கெனவே அடைந்து விட்டதைப்போல் ஆபிரகாம் எண்ணியிருந்தான். இந்த நிருபத்தின் ஆசிரியர் அந்த விசுவாச வீரர்கள்,அவிசுவாசம் தங்களை நெருங்க அனுமதிக்கவில்லை மற்றும் தேவனை கேள்வி கேட்கவும் இல்லை என்று கூறுகிறார். தற்காலத்தில் நிகழ்ந்து விட்டதைப் போன்ற அளவுக்கு, வருங்காலத்தை எதிர்நோக்கி இருந்தனர்."விசுவாசத்தின்னால் நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்கிறார் எபிரெய ஆசிரியர். அதன் பொருள் நாம் எந்த அறிவைக் கொண்டும் அதை அறிந்து கொள்ள முடியாது. அவர் மீது கொண்ட விசுவாசத்தில் அப்படிப்பட்ட காரியம் சாத்தியமாகுமா என்று நாம் தேவனை சந்தேகப்படுவதில்லை. அதைத்தான் ஆதி.1 : 1-ம் வசனத்தில் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார்" என்றுரைக்கப்பட்டது. தெய்வ பற்றுள்ள எவனும், இயற்கையைப் பற்றிய எந்தவிஞ்ஞான கண்டுபிடிப்பைக் குறித்து கவலைப்படமாட்டான் அவைகள் தேவனுடைய வல்லமையையும்,ஞானத்தையும் வெளிப்படுத்துகிறது என்பதை அறிவான்.

மேலும்,"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கைகளைக்குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் " என்றார் எபிரேயருக்கு எழுதின ஆசிரியர். ஆபேலின் ஜீவியம், காயீனிடத்திலிருந்து பிரிக்கப்பட கூடாததாயிருந்தது. சகோதரர்களுக்கிடையே இருந்த பிரச்சனை, காயீன் தவறானதை தேர்ந்தெடுக்கிறான். தன் சகோதரன் சரியான பலியை செலுத்தி தேவ அங்கிகாரம் பெற்றதால், அவனை வெறுத்து,அவன்மேல் பொறாமை கொள்கிறான். அந்த கோபம்,மனிதாபிமானத்தையும் மறந்து அவனை ஒரு கொலை காரனாக மாற்றியது காயீன் செய்த பாவம் தேவனுக்கு விரோதமாகவும் இருந்தது. மாம்சத்தின் ஜீவன் ரத்தத்தில் இருக்கிறது. ஆகவே ஒருவனுடைய உயிரைப்பறிக்க யாருக்கும் உரிமையில்லை. அந்த துணிகர செயலில் காயீனுடைய தண்டனை ஆரம்பமாகிறது. இப்பாவத்தின் பிரதிபலனால், காயீன் நிலையற்று அலைகிறவனானான்.

மனிதனுக்கு மனிதன் காட்டவேண்டிய இரக்கத்தை மறந்தவன், சகோதர அன்பை முறித்தவன் என்ற பெயரோடு அலைகிறவனானான். ஆபேலே முதல் தியாகியானான். ஆபேலின் காணிக்கையை தேவன் ஏற்றுக்கொண்டார் என்று இவ்விரண்டு சகோதரர்கள் எப்படி அறிந்தார்கள் என்பதற்கான தடையம் எதுவும் ஆதியாகமத்தில்குறிப்பிடவில்லையாயினும், தேவனுக்கு எதிராக காயீன் பாவம் செய்ததை உணர்ந்திருந்தான். குடி முதல்வர் அல்லது முதாதையர் யுகத்தில், அவர்களே அந்தந்த குடிக்கு ஆசாரியராக இருந்தனர். ஆகவே தேவன் அவர்களுக்கு எப்படிப்பட்ட பலியை செலுத்த வேண்டுமென்பதை வெளிப்படுத்தி இருக்கவேண்டும்.

அதைத்தான் பவுல் "விசுவாசம் கேள்வியினால் வரும்.. கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்றார். ஆகவே இவ்விரண்டு சகோதரர்களும் தேவனுடைய செய்தியை கேட்டிருக்க வேண்டும். ஒருவன் விசுவாசத்தினால் செயல்பட்டிருக்கிறான் மற்றவன் அப்படி செய்யவில்லை. ஆபேலின் செயல் தேவனிடத்தில் அவன் கொண்டிருந்த யதார்த்தமான நம்பிக்கை, விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. தேவனிடத்தில் சேர்ந்து, அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கின்ற அளவுக்கு அப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவனாக இருந்திருக்கிறான். உண்மையான காரியங்கள் உள்ள உலகத்தில் தான், மெய்யான மனித உணர்வுகள் மத்தியில் தான் உண்மையான விசுவாசம் தங்கும். அதனதன் சரியான கண்ணோட்டங்களில் விடுவதுதான் விசுவாசத்தின் வேலை. இன்று அற்புதங்களை செய்கிறோம், அந்நிய பாஷைகளை பேசுகிறோம் என்று கூறும் மக்கள், விசுவாசத்தை உண்டாக்க அனேக காரியங்களை செய்வதாகச் சொல்லுகிறார்கள். தேவனிடத்தில் ஒரு அனுபவத்தை பெற்றிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் வேதவசன ஆதாரத்தை கொடுக்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய விசுவாசம் நம்பக்கூடியது அல்ல. ஆபேலிடத்தில் இருந்த விசுவாசம் , எபிரெயர் ஆசிரியர் கூறியதுபோல, "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர்" என்ற விசுவாசம் நம்பக்கூடிய விசுவாசம். ஆபேல் மரணத்தின் காரணம் அவனுடைய நீதி. நன்மை தீமை இவைஇரண்டில் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து செயலாற்றத்தக்க திறனுடன் மனிதன் படைக்கப்பட்டிருக்கிறான். ஆபேல் தேவ சத்தத்தை கேட்டு நல்லதையே தேர்ந்தெடுத்தான்.காயீனோ தன் உள்ளத்தில் வைத்து இருந்த கீழான இச்சைக்கு ஒப்புக் கொடுத்தான். ஆகவே அந்த கொலையைச் செய்தான். நாம் நீதியை செய்தால் தான் தெய்வீக அங்கிகாரத்தை பெற முடியும். இல்லையேல் காயீனைப்பார்த்து நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னை பற்றியிருக்கும். நீ அவனை ஆண்டு கொள்ளுவாய்" என்றார்.

அன்புள்ள நண்பனே, நீ தேவனை விசுவாசிக்கிறாயா? கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நம்புகிறாயா? உன் பாவத்தைவிட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவை உன் வாயினால் அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், நீயும் இரட்சிக்கப்படுவாய்.தேவனுடைய குடும்பத்தில் மற்றபடியும் பிறக்கலாம். கிறிஸ்து உன்னை அவருடைய சபையில் சேர்க்கிறார்.

பொருள் : தேவனுடைய உடன்படிக்கையைக் காத்துக்கொள்ள தவறிய இஸ்ரவேலுக்கு அளிக்கப்படவிருக்கும் நியாயத்தீர்ப்பின் பாரம்.

ஆக்கியோன் : ஆமோஸ்

காலம் : ஏறக்குறைய 760-750 கி.மு

திட்டவரைக் குறிப்பு : ★ ஆமோஸ் வெளிப்படுத்துகிறது: அன்பின் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் பக்தியினையும் பாதகங்களையும் கண்டனம் பண்ணி நீதியை எதிர்பார்க்கிறார். 1 - 6

★மேலும் தேவனுடைய உண்மையான தரிசனமும் ஞானமும் குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பின் சந்திப்பில் நம்பிக்கையைக் கொடுக்கிறது.7 - 9

ஆமோஸ் ஜனங்களை தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தர் அவர்களை நியாயந்தீர்க்க அதிகாரமுடையவர் என்பதை அறியும்படி அழைப்பு விடுகிறார். தேவனுடைய இரக்கத்தை பெறவும் அன்பின் ஐக்கியத்தை புதுப்பித்துக்கொள்ளவும் அழைப்பு விடுகிறார்.

சிறப்புச் செய்தி :

"இதே, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன்".

வரலாற்று பின்னணி :

இரண்டாம் யெரொபெயாமின் ஆட்சி காலத்திலிருந்த செழிப்பும், ஆவிக்குரிய சோர்வும், பெருமை, சுயநலம்,பேராசை,அடக்குமுறை மற்றும் ஒழுக்கச் சீர்கேடு ஆகியவற்றிற்கு வழிநடத்தியது; எனவே தேவன் ஆமோஸின் மூலமாக மனந்திரும்புதலின் அழைப்பை விடுத்தார்.

வேத அறிவுப்போட்டி எண் 40-ன் விடைகள்

1. கர்த்தர் -மீகா 7 : 8	6. பரிசுத்த ஆவிக்கு - அப்.7 :51
2. வாசஸ்தலமாகும்படி - சங்.132 :13	7.உங்கள் சுய - 1தெச.2:14
3. மோசே - உபா.9 :19	8. சங்கீதம் பாடக்கடவன் - யாக்.5 :13
4. நான் கர்த்தர் - எசே.37 : 13	9.பவுல், பிலேமோனுக்கு - பிலே.20
5. சாட்சிகளாயிருப்பீர்கள் - யோவா.15 : 27	10 நேபுசாரதான் - எரே.39 : 10

D.எபினேசர்

உரையாடல் - 17

யோனத்தான் : கிறிஸ்துவின் அரசாங்கமா? ரொம்ப ஆச்சரியமா இருக்கே!

தாவீது : பைபிளில் அது தேவனுடைய இராஜ்யம் அல்லது கிறிஸ்துவின் ராஜ்யம்னு குறிப்பிடப்பட்டிருக்கு.

யோனத்தான் : ஆம் இப்ப எனக்கு ஞாபகம் வந்துருச்சு, பரமண்டல ஜெபத்துல ராஜ்யம் வருவதாக என்று சொல்றாங்களே, அந்த ராஜ்யம்தானே!

தாவீது : Yes, அதே ராஜ்யம் தான்.

யோனத்தான் : அது இப்ப வந்துருச்சா இல்லே வரணுமா?

தாவீது : அதப்பத்தி பேசறதுக்கு முன்னாடி அறிக்கையிடுதல் பற்றி நீ கேட்ட கேள்விக்கு பைபிள் என்ன சொல்லுகிறதுன்னு பார்த்துருவோமா?

யோனத்தான் : ஆமாமா! அதுக்குள்ள நம்ம வேற வேற subject-க்குள்ள போய்ட்டோம்.

தாவீது : ஆண்டவர் வாழ்ந்த காலத்துல, அவரை அறிக்கை செய்யக் கூடாதுன்னு யூதர்கள் மிகுந்த கட்டுப்பாடு பண்ணியிருந்தாங்க யோவா.9 : 22.இதனால சிலர் இரகசிய சீஷராகக்கூட இருந்தாங்க யோவா.19 : 38. ஆனா இயேசு என்ன சொல்றாருன்னா மத்.10: 32, 33ல் "மனுஷருக்கு முன்பாக என்னை அறிக்கை செஞ்சா நான் அவர்களை தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்வேன். என்னை மறுதலித்தா நானும் அவர்களை மறுதலிப்பேன்" என்று சொல்றாரு. இரட்சிக்கப்பட வேண்டுமானால் இயேசுவை வாயினால் அறிக்கையிட வேண்டுமென்று ரோம.10 : 9,10 ஆகிய வசனங்கள் சொல்லுகிறது.

யோனத்தான் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அப்.8 : 37ல் எத்தியோப்பிய மந்திரி அறிக்கையிட்டாரே அதுமாதிரியா?

தாவீது : Correct. அதே மாதிரிதான் அப்புறம் ஞானஸ்நானம்தான்.

யோனத்தான் : ஆகா! இப்போ இரட்சிப்புக்கான கடைசிப்படிக்கு வந்துட்டோம்னு நினைக்கிறேன்!

தாவீது : ஆமா, அதப்பத்தி அடுத்தமுறை விபரமாய் பேசுவோம்.

(மீண்டும் சந்திப்போம்)

ஜெபியுங்கள்

புது வருடத்தை கட்டளையிட்ட கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி.....

இம்மாதம் தஞ்சையில் நடைபெற விருக்கும் 13வது வாசகர் கருத்தரங்குக்காக.....

நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலுக்காக.....

வேத அறிவுபோட்டி எண் 40-ல் வெற்றி பெற்றவர்கள்

P. மகாலிங்கம்	- மதுரை
Mrs. கிரேஸ்லூயிஸ்	- நிலவை
S. தண்டபாணி	- சிலுவத்தூர்
T. சிவக்குமார்	- சிலுவத்தூர்
S. ஆனந்தராஜ்	- ஈரோடு
S. ராஜபிரசாத்	- மதுரை
Mrs. பிரேமகுமாரி	- மதுரை
Mrs. வின்சென்ட் ராஜ்	- மதுரை
P.அலிஸ்மேரியம்மாள்	- வதிலை
S.R. பெரியசாமி	- சோளூர்
V. சரவணக்குமார்	- கோவை
A. கோபிநாத்	- சென்னை
V. சுரேஷ்குமார்	- J.பாளையம்
M. சீத்தா	- சென்னை
T. வேலுச்சாமி	- J.பாளையம்
S. மோகனப்பிரியா	- J.பாளையம்
Dr. ஜெயசிங்	- சென்னை
D. ஜேசுமுத்து	- சென்னை
M. பார்த்தசாரதி	- சென்னை
A. ஜோதி காந்தம்	- பாண்டியநல்லூர்
Mrs.வனிதாசாமுவேல்	- மதுரை
J.S. நிர்மலாஜான்	- மதுரை
G. ஏசையன்ராஜ்	- கோபி
K. சாந்தி	- M.வாடிப்பட்டி
G. மோகனப்பிரியா	- சிவகிரி
G. மல்லிகா	- சிவகிரி
B.S.டானியேல்	- செட்டிபாளையம்
R.A. பிளசன்	-கன்னியாகுமரி
K.S. பாலு	-செட்டிபாளையம்
K. குருசாமி	-சிவகிரி
S. சிவக்குமார்	-செட்டிபாயம்
S. அம்பிகா	-மரவபாளையம்
N. கஸ்தூரிகிறிஸ்டி	-திருவண்ணாமலை
K. பிரஜீதா	-ஈரோடு
Mrs. ஆறுமுகம்	-Y. ஒத்தக்கடை
B. ஜெயராணி	-நாகர்கோயில்
Mrs. குளோரிபவுல்சர்	-சென்னை
P. கந்தசாமி	-செரியன் நகர்
D. நகோமி	-சென்னை
N. கமலவேணி	-சென்னை
N. பொன்னி	-மதுரை
S. எஸ்தர்சேகர்	-கோபி
A. சேவியர்மேரி	-மதுரை
S. சிங்காரவேலு	-மதுரை
K.T. பிரேமகுமார்	-செட்டிபாளையம்
S. ஜான் ஸ்டாலின்	-செட்டிபாளையம்
M. அருள்தாஸ்	-செட்டிபாளையம்
D. சமாதான ராஜா	-செட்டிபாளையம்
P. சசிக்குமார்	-செட்டிபாளையம்
S. ரெக்ஸ்கிங்ஸ்லி	-செட்டிபாளையம்
N. இன்மானுவேல்ராஜ்	-செட்டிபாளையம்
S. காமாட்சி	-சமத்துவபுரம்
P.சாமுவேல்	-ஊதியூர்
P.M. சத்தியவாசகன்	-பனமரத்துப்பட்டி
G. செபஸ்டியன்	-செட்டிபாளையம்
A.ரெபேக்காள்	-மதுரை
P.M. அரசு	-பனமரத்துப்பட்டி
S. அகிலாசுந்தரம்	-நங்கவள்ளி
Mrs. ஜெயந்திநோயல்	-சேலம்

சீர்தூக்கிப் பார் **"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்"**



(நீதி.16 : 2)

"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்களுடைய நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் செல்லுகிறேன்"-இயேசு (மத்.5 : 20)

எரேமியாவை துரவிலிருந்து தூக்கிவிட்ட எத்தியோப்பியன்

வேத பகுதி : எரேமியா 38 : 6-13

கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லிக்கொண்டு வந்த எரேமியா தீர்க்கதரிசியை பிடித்து, காவற்சாலையின் முற்றத்திலிருக்கிற தண்ணீர் இல்லாத துரவிலே கையிறுகளினாலே இறக்கிவிட்டார்கள். அந்த தண்ணீர் இல்லாத பள்ளத்திலே எரேமியா என்ன செய்து இருப்பான்? அழுது இருப்பார் என்று நினைக்கிறீர்கள். அப்படியல்ல தேவனை நோக்கி ஜெபித்து இருப்பான்.

இச்செய்தியை கேள்விப்பட்ட எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானி எரேமியாவின் மேல் இரக்கப்பட்டு அதை ராஜாவுக்கு பயமின்றி உடனே அறிவித்தான். எப்படியேன்றால் ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்த மனிதர்கள் எரேமியா தீர்க்கதரிசியைத் தண்ணீர் இல்லாத துரவிலே போட்டதெல்லாம் தகாத காரியம். அவன் பட்டனியால் சாவானே; இனி இந்த நகரத்திலே அப்பம் கிடைக்காதே என்றான். உடனே ராஜாஎத்தியோப்பியனை நோக்கி: நீ இங்கிருந்து முப்பது பேரை உன்னோடுகூட்டிக் கொண்டு போய் எரேமியா தீர்க்கதரிசி சாவதற்கு முன்னே அவனைத் தூக்கிவிடு என்று கட்டளையிட்டான் உடனே அந்த எத்தியோப்பியன் முப்பது பேரையும் கூட்டிக் கொண்டு பழம்புடவைகளையும் எடுத்து கொண்டு போய் எரேமியாவைத் துரவிலிருந்து தூக்கிவிட்டான்.

"ஒருவன் நன்மை செய்ய அறிந்தும், அதை செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என யாக்கோபு 4:17ல் வாசிக்கின்றோம். இல்லையா! எத்தியோப்பியனுக்கு எரேமியா தீர்க்கதரிசி பிறனாயிருந்தாலும் அவனுக்கு உதவி செய்யும்படி ராஜா சமூகத்தில் கேட்டு அவன் சாகாமல் இருக்க தண்ணீர் இல்லாத துரவிலிருந்து தூக்கிவிட்டான். இன்று நாமும் உறவினர்,தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல மனிதனாக பிறந்த யாராக இருந்தாலும் சரி அவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்யவேண்டும். அப்படி உதவி செய்யாமற்போனால் அதுவே பாவமாகும். நீங்கள் இந்த எத்தியோப்பியனைப்போல உதவி செய்வீர்களா!

மனப்பாட வசனம்

"மகா ஆழமான கிடங்கிலிருந்து, கர்த்தாவே, உம்முடைய நாமத்தைப் பற்றிக் கூப்பிட்டேன்". (புலம்பல் 3:55)

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" ரோமர் 8 : 32

தஞ்சாவூரில் ..... கிறிஸ்துவின் சபை!

-Bro. JOHN SCHWARTZ

இது என்ன புதிய சபையா? இவ்வூரில் இதற்கு முன்பே பல சபைகள் இருக்கும் நிலையில் இன்னும் ஒரு சபை ஏன்? உங்களில் சிலர் கேட்கக்கூடும். இதை எதிர்பார்த்து உங்களுக்கு வேதாகமத்திலிருந்து விளக்கமளிக்க நாங்கள் முன்வந்துள்ளோம். ஆமாம். எல்லோரும் வேதாகமத்திலிருந்துதான் விளக்கம் கூறுகிறார்கள். அவரவர்கள் கூறும் போது அவரவர்கள் சொல்லுவது சரி என்பது போலத்தான் தோன்றுகிறது. இதில் எதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவது என்று நீங்கள். யோசிப்பது புரிகிறது.

உதாரணத்திற்கு 4+4=8 என்பதுதான் உண்மை. இதை விடுத்து வேறு ஒரு பதிலை கூறினால் அவர் எவ்வளவு பெரிய நபராக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வோமா? அதை போலவே எதிலும் உண்மை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து அதை ஏற்றுக்கொள்வதுதானே சரியாகும். எனவே எல்லாவற்றையும் சோதித்து பாருங்கள். நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவ மார்க்கம் சொல்லும் சபையைக் குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது? மத்தேயு 16:18-ல் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, பேதுருவினிடத்தில் "நீ பேதுருவாக இருக்கிறார். இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று கூறினார்.

அப்போஸ்தலர் 2:14-ல் பேதுரு. கிறிஸ்துவின் சபையை கிறிஸ்துவானவர் கட்டுவதற்கு தன்னை முதல் கல்லாக ஒப்படைக்கும் விதத்தில் தன்னுடைய பணியைத் தொடங்கி உள்ளதையும் 47-ம் வசனத்தில் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளுவது, தானாக ஒருவரோ அல்லது பிரசங்கியாரோ, போதகரோ சபையிலே சேரவோ அல்லது சேர்த்து கொள்ளவோ இயலாது.

பேதுருவிடம் இயேசுவானவர் கூறியதுபோல அவருடைய சபையை அவரே கட்டி வருகிறார். இதை உறுதிப்படுத்தும் வகையில் பவுல் ரோம சபைக்கு எழுதும் கடிதத்தில் 16:16-ல் **"கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்"** என குறிப்பிடுகின்றார். தனது சொந்த இரத்தத்தினால் சம்பாதித்துக்கொண்ட சபைக்கு (அப்.20:28) அவரே தலைவராகவும் தலையாகவும் இருக்கிறார். (எபேசியர் 1:23). கிறிஸ்துவின் சரீதமாகிய சபைக்கு (எபே 4:12) அவரே பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு சட்ட திட்டங்களை ஏற்படுத்தி உள்ளார். (2 தீமோ 3:16, 17) எனவே கிறிஸ்துவின் சபையின் போதனை, மனுஷருடைய விருப்பங்கள் சட்டங்கள் இவைகளின் உள்ளடங்கமாக இல்லாமல் தேவனுடைய வாக்கியங்களின்படி **100%** அமைந்துள்ளது (1பேதுரு 4:11)

தஞ்சாவூரில் கிறிஸ்துவின் சபையைக் கட்டும் பணியில் நாங்கள் எங்களை உடன் வேலையாட்களாக அவருடன் இணைத்துக்கொண்டுள்ளோம். இப்பணியில் எங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள்.

வேத அறிவுப் போட்டி எண். 41

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். 25 பைசா தபால் கார்டை தவிர்க்கவும்.

1. யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக எப்படியாக்கினதினால் பலப்பட்டான்?
2. தன் ஆவியை அடக்காத மனுஷன் எப்பட்டணம் போலிருக்கிறான்?
3. நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல என்பது யார்?
4. உங்கள் நன்மை தூஷிக்கப்பட என்ன செய்யாதிருங்கள்?
5. எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்ற அப்போஸ்தலன் யார்?
6. இஸ்ரவேலர் மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள் வரைக்கும் என்ன செய்யாதிருப்பார்கள்?
7. மேடுகளிலே கர்வாலிமரங்களின் கீழும், புன்னை மரங்களின் கீழும், அரசமரங்களின் கீழும், அவைகளின் நிழல் நல்லதென்று, என்ன செய்கிறார்கள்?
8. தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான், அதனால் யார் அவனைத் தொடான்?
9. ஒரு கை முழமும் நாலு விரற்கடையும் கொண்டது எத்தனை முழமாகும்?
10. நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்கு என்ன உண்டு என்று கர்த்தர் எந்த சபைக்கு எழுதுகிறார்?

நடப்புச்செய்திகள்

- போலி மருந்து விற்றால் மரணதண்டனை விதிக்க மத்திய மந்திரிசபை முடிவு செய்துள்ளது.
- பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் 1 1/2 கோடி ஏழைகளுக்கு இலவச வேட்டி-சேலை வழங்கப்பட உள்ளதாக தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் வி.சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.
- அடுத்த கல்வி ஆண்டு முதல் பள்ளி, கல்லூரிகளில் சுற்றுச்சூழல் பாடப்பிரிவை கட்டாயமாக கற்பிக்கவேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.
- கடந்த 9 மாதங்களாக அமெரிக்கப்படைகளின் கழுகு கண்களுக்கு தப்பி வந்த சதாம் உசேன் இறுதியில் பிடிபட்டார்.
- 22 ஆண்டுகளுக்கு பிறகு ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



HEAR THE VOICE OF TRUTH

ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

LANGUAGE	DAY'S	TIME	ADDRESS	SPEAKER
HINDI	Sunday Thursday	6.45 a.m 7.00 a.m	Box. 3815 New Delhi - 110 049	SUNNY DAVID
TELUGU	Sun,Mon Wed,Thu	2.00 p.m 2.15 p.m	Box. 80 Kakinada - 533 001	JOSHUA GOOTAM
TAMIL	Mon, Tue, Wed, Thu, Fri	5.30 p.m 5.45 p.m	Box. 8405 Bangalore - 560 084	P.R. SWAMY
MALAYALAM	Friday	3.45 p.m 4.00 p.m	Box. 5540 Trivandrum - 695 034	P.K. VARGHESE
PAITE	Sunday	8.00 p.m 8.15 p.m	Box. 56 Manipur - 795 128	KAMLIAN PAO

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th January 2004.

Monthly Magazine

To

From

Editor
THE WORD OF CHRIST
Post Box No.5,
Batlagundu-624 202.